உ
ஓம் சக்தி



காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும்
கண்டாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான

அமரர்

# திரு.ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

12-08-2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணணில
18-01-1921

விணணில
05-07-2006

அமரர்

# திரு. ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

அவாகளின திதி வெணபா

ஆணடு வியதுமாம ஆய ஆனிமாதம
பூணட இருபத தொனறினிலே - நீணட
தசமித திதியில தககோன கணபதிபபிளளை
வசமானாா வடிவேலன தாள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் துதி



ஐந்து கரத்தனை யானை முகத்தினை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடிபோற்று கின்றேனே.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக்காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனிற் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம

# தேவாரம்

## 1ஆம் திருமுறை

தோடுடைய செவியன்விடை ஏறிஓர்
        தூவெண் மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன்
        உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்து
        ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய
        பெம்மான் இவனன்றே.

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதஞ்சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோலார்
நாதா எனவு நக்கா எனவு நம்பா என நின்று
பாதம் தொழுவார் பாவந் தீர்ப்பார் பழன நகராரே

## 2ஆம் திருமுறை

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழ நின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே.

## 3ஆம் திருமுறை

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடோறும் பரவ
பொங்கழலுருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருளும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவாயாவது மிதுவே.

## 4ஆம் திருமுறை

கூற்றாயின வாறுவிலக் ககலீர்
கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என்வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறைஅம் மானே.

வேயிறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

## 5ஆம் திருமுறை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6ஆம் திருமுறை

எல்லா உலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதிநீ

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஒரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
யிறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே.

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிவு வேண்டில்
சுற்றநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னை யல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்ந்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7ஆம் திருமுறை

பித்தாபிறை சூடிபெரு மானேஅரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அத்தா உனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே.

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே.

## 8ஆம் திருமுறை

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்துன்
விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்து ன்னைப் போற்றி சயசய
போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக்
கண்டு கொள்ளே

பால்நினைந்தூட்டும் தாயினும்சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

## 9ஆம் திருமுறை

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உளறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 9ஆம் திருமுறை

பாலுக்கு பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

### 10ஆம் திருமுறை

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்தி ருந்தாரே.

யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே.

## வெண்பா

### 11ஆம் திருமுறை

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன் யான்
செய்யும் திருவெற்றி யூருடையீர் திருநீறு மிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனையால் வருந்தோஷஞ் செய்த
பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணிய நூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிருந் தீங்க ளாவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி ஏகும்பனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய புராணம்

### 12ஆம் திருமுறை

மண்ணு லகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொரு ளெல்லாம் எளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

வேதநாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி மறுசமயங்கள் மாளப்
பேதகஞ் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றி, யான் செய்
பாதகம் அனைத்துந் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே.

துள்ளுமத வேட்கை கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மேள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகுமானைத் தருள்வாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழும் ஞானக் கழலோனே
வள்ளி மணவானப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

## (திருப்பெருந்துறையில் அருளியது)

### சிவனது அநாதி முறையான பழமை

*திருச்சிற்றம்பலம்*

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண் நுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அளிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம் கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்து இருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டிப்
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்குமூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேர் ஆறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆர் உயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்ச்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண் ஆர் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

(திருப்பெருந்துறையில் அருளியது)

## திரோதான சுத்தி

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்(டு)
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில் நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப் பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 1

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப் பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி யுதயத்(து)
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டு கொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தரகோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய் உலகுக் குயிரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 10




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

(திருவண்ணாமலையில் அருளியது)

சத்தியை வியந்தது

*திருச்சிற்றம்பலம்*

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற்கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவுபாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீர் ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண் முலையீர் வாயார நாம் பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் க. ஆ. கணபதிப்பிள்ளை
## அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

ஈழத்திருநாடு இந்துமாகடலின் முத்தாகத்திகழ்கிறது. அவ்ஈழநாட்டின் சிரசாக யாழ்ப்பாணம் அமைந்துள்ளது. முல்லை மருதம் நெய்தல் அணிசெய்ய யாழ். மாவட்டத்திலுள்ள காரைநகர் சிவபூமியாகத் திகழ்கிறது. காரைநகரில் உள்ள பலகாடு பண்டைய இராசாக்களின் வதிவிடமாகவும் தோட்டமாகவும் அமைந்திருந்தது என்பது வரலாற்று உண்மையாகும். வரலாற்றுப் பெருமைமிகு பலகாட்டில் சைவவேளாண்குல திலகர் ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளைக்கு கனிஷ்ட புத்திரனாக கணபதிப்பிள்ளை பிறந்தார். முருகேசு, சின்னத்துரை, வேலுப்பிள்ளை தக்கமுத்து ஆகியோர் அவரின் உடன்பிறப்புக்கள் ஆவர்.

கல்வியை முடித்த பின் கணபதிப்பிள்ளை "டிக்கோயா சின்னத்துரை சகோதரர்" வர்த்தகஸ்தாபனத்தில் சகோதரர்களுடன் இணைந்து வர்த்தகம் செய்தார். பருவம் எய்திய கணபதிப்பிள்ளைக்கு பெற்றோர் தங்கோடை பற்றாசிங்கத்தின் பரம்பரை வந்த கார்காத்த வேளாளரும் பெரிய நிலச்சுவானுமான கந்தப்பு வள்ளியம்மை புதல்வி செல்லம்மாவைத் திருமணம் செய்து வைத்தனர்.

'மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு'

கணபதிப்பிள்ளை தம்பதியினர் இல்லறமாம் நல்லறத்தின் பலனாக நாகரத்தினம், நாகம்மா, சிவபாதசுந்தரம், செல்வக்குமார், செல்வராணி, உருக்மணிதேவி, புவனேஸ்வரி, கங்காதேவி பிறந்தனர். பெற்றோர் பிள்ளைகட்கு கல்வி வளம் கொடுத்து சிறப்பாக வளர்த்தனர். திருமணப்பருவம் அடைந்தபோது, பொறியியலாளர் நாகரத்தினத்திற்கு வேதநாயகியையும், நாகம்மாவிற்கு நடராசாவையும், சிவபாதசுந்தரதிற்கு சிவவாணியையும், செல்வக்குமாரனுக்கு செல்வறஞ்சனியையும், செல்வராணிக்கு இராசையாவையும், உருக்மணிதேவிக்கு சிவபாலனையும், புவனேஸ்வரிக்கு சிவபாதசுந்தரத்தையும், கங்காதேவிக்கு இரத்தினகுமாரையும் பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர்.

தயாளினி, றமேஸ், சுரேஸ், ஜெயந்தினி, ஜெயந்தன், ஜெயரஜனி, ஆதிரை, அம்பிகை, நிசாந்தி, நிரோஜனி, சிவமலர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனேஸ்வரி, சிவகவுரி, ஜனார்த்தனன், ரேவதி, செல்வரூபன், ஆர்த்திகா, நிரோஜன், நிவா, மிதுன், ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாகவும், அனித்தா, தனுஷன், இந்துஜா, அனுசா, அருண், தனுசியா ஆகியோரைப் பூட்டப்பிள்ளைகளாகவும் பெற்று கணபதிப்பிள்ளை பெருவாழ்வு வாழ்ந்தார்.

"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணியல்ல மற்றுப் பிற"

என்றாங்கு பெற்றோர், சகோதரர், சகோதரி, மாமன், மாமி, மைத்துனர், மைத்துனிமார் பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர் பேரப்பிள்ளைகள் அனைவருடனும் இன்சொல் பேசி அன்புடன் வாழ்ந்து வந்தார். இவர் ஈழத்துச்சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானிடமும் மணற்காடு முத்துமாரி அம்பாளிலும் பக்தி மிக்கவர். திருவிழாக்காலங்களில் அங்கு சென்று தரிசனம் செய்வார். காரைநகர், கொழும்பு, கனடா, பிரான்ஸ் பல இடங்களிற்கும் போய் வந்தார். எனினும் ஆயிரம் பிறை கண்ட திரு. கணபதிப்பிள்ளை தான் பிறந்த பொன்னாட்டிலேயே ஆனிமாதம் இருபத்தோராம் திகதி புதன்கிழமை இரவு தசமித் திதியும் சுவாதியும் கூடிய நேரத்தில் சிவபதம் அடைந்தார்.

அன்னாரது ஆன்மா சிவனடிசேர்ந்து பேரின்பம் பெற்றுய்ய இறைவனைப் பிரார்த்திப்போம்.

ஓம் உலகம் எல்லாம் உயர்நலம் பெருகுக.
அகிலம் எங்கும் அமைதி நிலவுக.
பாருலகெங்கும் பூரணம் பொலிக.
அசத்து அறநீங்கி சத்தே வருக
இருள் அறநீக்கி ஒளியே வருக.
வீழ்வது நீங்கி வாழ்வே வருக.
வேற்றுமை நீங்கி ஒற்றுமை வருக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் இரங்கல்

நாகரட்ணம், நாகம்மா, சிவபாதசுந்தரம், செல்வக்குமார் (அவுஸ்திரேலியா), செல்வராணி (பிரான்ஸ்) ருக்மணிதேவி (கொழும்பு) புவனேஸ்வரி, கங்காதேவி.

அப்பா எங்களில் அன்பைக் காட்டி
தப்பா மல்எமை நன்கு பார்த்து
எப்பா கத்திலும் இருந்தும் எமைப்பெரும்
சொத்தாய்ப் பார்த்ததை எப்படி மறப்போம்

எத்தவம் செய்தோம் தந்தையாய் அடைய
இப்புவி வாழ்வில் எங்கினிக் காண
எத்தவி தவிப்பிலும் எங்கினி வருவீர்
நித்தமு மெங்கள் சிந்தையி லிருப்பீர்

கேட்டதை வாங்கித் தருவதில் உம்போல்
யாரையும் காணோம் இப்புவி மீதில்
நாட்டமு டன்எமை நன்கு வளர்ப்பதில்
நாளுமே இருந்ததை எண்ணிடக் கலக்கமே

எங்களின் படிப்பினில் உறுதியா யிருந்தீர்
எங்களுக் கேற்றவை செய்தும கிழ்ந்தீர்
எங்களுக் கென்றதும் பணத்தையும் பார்க்கா
திருந்து செலவு செய்வதில் மகிழ்ந்தீர்

குழந்தைக ளாயெம்மைத் தூக்கி வளர்த்தீர்
நலந்தர லாமென்ற கதைகள் சொன்னீர்
இழந்துவிட் டேயெம்மை விட்டுப் பிரிந்தீர்
இனியெங்கு காண்போம் இதயத்தி லிருப்பீர்

தந்தையா யிருந்து தரமாய் ஆக்கினீர்
விந்தையா யிருந்து வளமாய் வளர்த்தீர்
சிந்தையி லென்றும் சிறந்ததைக் கொண்டீர்
முந்தையர் நல்வழி வாழ வைத்தீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அறமுடன் அழகாய் வாழ்ந்திட
பண்புடன் பகலிர வென்றுமே பாராது
நன்மைகள் செய்யவே நட்புடன் நாடி
முன்புநீர் செய்ததை என்றுமே மறவோம்

தக்கநாள் வந்ததும் கல்வியில் வளர்த்தீர்
மிக்கநல் வார்த்தையை அன்பில் மொழிந்தீர்
சிக்கலில் லாமலெம் வாழ்வை ஆக்கினீர்
துக்கமாய் ஆகுதே விட்டுப் பிரிந்தீர்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டும்
மாண்டவர் வந்ததை யாரும் கண்டிலர்
வேண்டிடு வோமெம் இறைவனை என்றும்
ஆன்மா சாந்தி அடைக என்றும்

சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் இரங்கல்

வேதநாயகி, நடராசா, சிவவாணி, செல்வரஞ்ஜனி
(அவுஸ்திரேலியா) ராசையா (பிரான்ஸ்) சிவபாலன் (கொழும்பு)
சிவபாதசுந்தரம், ரட்ணகுமார்

மருமக்க ளேயாகி மகிழ்வா யிருந்தோம்
மறைந்த தனைக்கேட்டு மகிழ்ச்சியை இழந்தோம்
கருமங்க லுயர்வாய்ச் செய்ததில் மகிழ்ந்தோம்
வெறும்பேச் சாலின்றிச் செயல்களில் கண்டோம்

மாமனா ருங்களால் பெருமிதம்கொண்டோம்
இல்லையா யானதால்மனமிக நொந்தோம்
நாமமும் ஓங்கிட வாழ்ந்திடக் கண்டோம்
நடந்ததே இப்படி வேதனை கொண்டோம்

இன்பமா யிருந்தது இனியநாள் நினைவுகள்
இன்னுமி ருந்திடும் அந்தநாள் ஞாபகம்
என்றுமே எங்களில் உங்களின் நினைவுகள்
துன்பமே எண்ணிட நீங்கலில் லாமலே

சொந்தமக் கள்ளெனப் பார்த்துவிட் டீர்கள்
எந்தநே ரத்திலும் உதவிசெய் தீர்கள்
வந்தநா ளேமுதல் வாழவைத் தீர்கள்
எந்தநா ளும்மினி எம்மிலிருப் பீர்கள்

மக்கள் மருமக்கள் என்றுபா ராது
பக்கம் ஒன்றும் தான்சா ராது
தக்க பிழையினை யும்தவ றாது
செப்பும் தன்மை என்றும் இவரது

இன்னும் காலம் எங்களோ டிருக்க
என்று நாமும் எண்ணிட லாக
மின்னும் வாழ்வில் இருந்துவிட் டோட
கண்ணீர் மல்கி ஆறாய் ஆகுதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனுடன் இருப்பீர் சென்றங்கு சிறப்பீர்
சிவனரு ளோடு சிறப்பா யிருப்பீர்
நவவாழ் வங்கே நட்பா யிருப்பீர்
நாமதை எண்ணி ஆறுதல் கொள்வோம்

சாந்தி

# பேரப்பிள்ளைகள் இரங்கல்

தயாளினி, ரமேஷ், சுரேஷ், ஜெயந்தினி, ஜெயந்தன், ஜெயரஜனி, ஆதிரை, அம்பிகை, நிசாந்தினி (அவுஸ்திரேலியா), நிரோசினி (அவுஸ்திரேலியா), சிவமலர்(பிரான்ஸ்), சிவனேஸ்வரி(பிரான்ஸ்), சிவகௌரி(பிரான்ஸ்), ஜனார்த்தனன் (பிரான்ஸ்), ரேவதி (பிரான்ஸ்), செல்வரூபன் (இங்கிலாந்து), ஆர்திகா (கொழும்பு), நீரோசன், நிவா, மிதுன்.

அப்பப்பா ஏனிங்கே இல்லை இப்போ
ஏதேனும் செய்தோமா நாங்கள் தப்பா
எப்பப்பா வருவீர்கள் எங்களை எப்போ
தப்பாமல் காண்பீர்கள் தரையினில் நாங்கள்

கொண்டுவந் தெமக்கு ஊட்டி மகிழ்ந்தீர்
வண்டுக ளாயுங்கள் மடியில் மகிழ்ந்தோம்
துண்டுக ளாயுணவைத் தந்து மகிழ்ந்தீர்
கண்டுகொண் டிருப்பதில் எம்மில் மகிழ்ந்தீர்

தாத்தா வந்தால் தரையே மகிழும்
கூத்தா டிடுவார் வீடே அதிரும்
காத்தே இருப்பார் எங்களை அதிகம்
நாத்தடு மாறுது சென்றீர் தூரம்

எங்களோ டிருந்து எங்களில் மகிழ்ந்தீர்
உங்களோ டிருக்க நாங்களும் மகிழ்ந்தோம்
மங்குமா எங்களில் உங்களின் நினைவு
தங்குமே எங்களில் என்றுமே இன்னும்

சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டப்பிள்ளைகள்

அனிதா, தனுஷன், சிந்துஜா, அனுஷா, அருண், தனுஷியா (எல்லோரும் பிரான்ஸ்)

பூட்டப் பிள்ளைக ளெங்களைக் காண
வீட்டுக்கு வந்தா லேமகிழ் வோமே
ஆட்டமில் லாது அசையா தானோம்
காட்ட இனிமேல் இல்லையென் றானீர்

நினைக்க நினைக்க இன்பம் தந்தீர்
இனிக்க இனிக்க எல்லாம் தந்தீர்
தனிக்க வலையை இப்போ தந்தீர்
தவிக்கி றோமே எங்கே சென்றீர்

பண்புடன் எம்மைப் பாங்காய்ப் பார்த்தீர்
கண்விழித் தெம்மைக் காவல் காத்தீர்
மண்பதை யில்இன்றி எங்கே சென்றீர்
விண்ணுல கம்மென்று அங்கா சென்றீர்

நல்லதைத் தேடிச் சென்றுவிட் டீரா
நன்றங்கு வாழச் சென்றுவிட் டீரா
இன்றிங்கு இல்லா வாழ்வினைக் காண
என்றுமே சிவனுடன் இருந்துகொண் டீரா

சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறா மக்கள் இரங்கல்

இல்லாமை கேட்க இயலாம லானோம்
நில்லாமை வாழ்வில் நிலையேது காணோம்
வல்லோன் வழியினில் மாற்றமும் காணோம்
இல்லாம லாவதை நிறுத்திடக் காணோம்

என்றுமே எமக்கென என்றுமி ருந்தீர்
நன்மையே செய்யவே என்றுமி ருந்தீர்
ஒன்றுசேர் நலமுடன் சிவனிடம் சென்றீர்
என்றுமே தங்கிடும் வாழ்வினைக் கண்டீர்

உற்றாரை உறவினரை ஒன்றாகக் கண்டீர்
கற்றாரை யும்கண்டு கனிவு கலந்தீர்
நற்றாரின் நட்பை நாடி நடந்தீர்
பற்றெம்மி லேயென்றும் பிசகா திருந்தீர்

சிவனருள் பெற்றுயிர் வாழுவீர் நன்மையில்
சிவனுட னிருப்பீர் என்பதெம் சிந்தையில்
தவரெதும் இல்லாத உங்களின் வாழ்வினில்
சிவனுடன் வாழ்வதில் தானினி உண்மையில்

தங்குமோர் இடமிது அல்லதே ஆனது
தங்கிட நல்லிட மென்றுஅங் கானது
எங்குமே இருந்தும் நடந்திட லானது
அங்குமே சென்று சிவனுட னானது

சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவினர் நண்பர்கள் இரங்கல்

அன்பாய்ப் பழகிய நாள் முதலாய்
அருகில் இருப்பது போலுணர்ந் தோம்
என்றும் எங்களில் உயிர்நட் பாய்
இருந்தது போலினி யாரிருப் பர்

கதறுகின் றோம்நாம் காணாம லின்று
பதறுகின் றோம்நாம் போய்விட்டீ ரன்று
சிதறுகின் றோம்நாம் சிந்தையும் நொந்து
நினைத்திட எங்கள் நெஞ்சமும் வெந்து

எங்களை விட்டு ஏகிவிட் டீரே
சொல்லிட நாவு வரண்டுவிட் டதுவே
எங்களுள் நீங்களில் லையெனக் குறையே
இக்குறை தீருமோ நீங்களில் லாமலே

இன்றுமை எண்ணவே கண்களில் கண்ணீர்
இன்னுமே கண்களில் உங்களின் காட்சி
காணவே உங்களை என்றுமே மாட்சி
போனதே எங்களில் குறையென ஆட்சி

அன்பினால் வந்தெங்கள் ஆருயிர் ஆனீர்
அன்றுமுத லெங்களுக் கென்றுதான் ஆனீர்
அன்புதான் சிவனென அவனிட னானீர்
அங்குதா னாகியே இன்பமா யாவீர்


சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது பாசமிகு ஐயாவின்
மறைவுத்துயர் கேட்டு
உடன்வந்து அனுதாபம் தெரிவித்து
ஆறுதல் கூறிய
உற்றார், உறவினர் நண்பர்களுக்கும், நேரில் வந்து
கலந்துகொண்டோர்க்கும், தந்திகள், கடிதங்கள்,
தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகளை
வழங்கியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை அச்சிட்டு
வழங்கிய நண்பர்கள் உறவினர்கட்கும்,
தேவாரம் தோத்திரம் பாடிய அன்பர்கள் அனைவருக்கும்,
இறுதிச் சடங்கினைச் சமயாசார முறைப்படி செய்து உதவிய
குருக்களுக்கும், கிரியைகள் இறுதியாத்திரையில் கலந்து
கொண்ட அனைவருக்கும்,
இம்மலருக்கான இரங்கட்பாக்களை மிகக் குறுகிய காலத்தில்
இயற்றித்தந்த பெரும்புலவர் முஹமத் ஹன்ஸீர் அவர்கட்கும்,
அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதித் தந்த
அண்ணாமலைப் பல்கலைக்ழக புலவர் மைத்துனி
பூரணம் ஏனாதிநாதன் அவர்கட்கும், இரங்கட்பாக்களைப்
பாடியவர்கட்கும், மறைவுச் செய்தி கேட்ட நாளிலிருந்து
பலபாகங்களிலிருந்தும் மனமுவந்து அன்ன ஆகாரங்களை
எமதில்லத்திற்கு வழங்கிய உற்றார் உறவினர் நண்பர்களுக்கும்,
மைத்துனர் முன்னைநாள் சுங்க அதிகாரி திரு. கே. கே.
சுப்பிரமணியம் அவர்களுக்கும், பெறாமகன் முன்னைநாள்
இந்துக் கலாச்சார அமைச்சரும் தற்போதைய கொழும்பு
மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
திரு. தியாகராஜா மகேஸ்வரன் அவர்களுக்கும்,
இந்த நினைவுமலரை அழகுற அச்சமைத்துத் தந்த
அச்சகத்தினருக்கும்
ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டிய
அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

இஙஙனம
மகககள, மருமகககள,
பேரபபிளளைகள
பூடடபபிளளைகள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்கே உலகு

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்

# தமிழ் எழுத்துக்கள்

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org